1987 மார்ச் 5]

மலிவு விலையில் பொதுமக்களுக்கு கோதுமை விநியோகம்.

63—(* வினா எண். 11261) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலிவு விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய மத்திய அரசு மாநில அரசுக்கு கோதுமை ஒதுக்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பொது விநியோக முறையில் வழங்க மைய அரசு குவிண்டால் ரூ. 190 என்ற விலையில் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமை வழங்குகிறது. இவ்வரசு அதை கிலோ 2.05 என்ற விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கிறது. இதைத் தவிர ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில் விநியோகிப்பதற்கு குவிண்டால் ரூ. 125 என்ற விலையில் மைய அரசு கோதுமையை வழங்குகிறது. அது,மைய அரசின் அறிவுரைப்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ரூ. 1 50 என்ற விலையில் விநியோகிக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வழங்கும் 30,000 டன் கோதுமையும் போதுமானது என்று இந்த அரசு கருதுகிறதா? மேலும் ஒதுக்கீடு வேண்டுமென்று தமிழக அரசு கோரி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 30,000 டன் கோதுமையை ஒதுக்கினாலும் நமக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 டன்னுக்கு மேல் செலவு ஆவதில்லை. ஆக, அவர்கள் ஒதுக்குவதையேகூட நாம் செலவிடவில்லையென்றால் அதற்குக் காரணம் நம்முடைய மக்கள், கோதுமையை அவ்வளவாக விரும்பவில்லை, அரிசியைத் தான் பெரும்பாலான மக்கள் உணவாகப் பயன் படுத்துகிறார்கள். மேலும் அரிசி போதுமான அளவு கிடைக்கிறது என்பதும் இப்போதுள்ள நிலைமை.

அமராவதி ஆற்றிலிருந்த மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியக்கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல்.

64—(* வினா எண். 3915) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் அமராவதி ஆற்றிலிருந்து நல்லண்ணகவுண்டன் புதூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மயிலாபுரம் மடத்தூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் வேலை எந்த நிலையில் உள்ளது?